19.08.2025.
DVC.06/2024

ம.சா.1, தாட்சாயணி,
எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை.

என்னிடம் காட்டப்படும் நிருபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். எனக்கும் எதிர்மனுதாரருக்கும் 28.10.2022ம் தேதி திருமணம் நடைபெற்றது. எங்களது திருமணத்தின்போது எனது மாமனார் உயிருடன் இல்லையென்றால் சரிதான். எனது திருமண செலவு அனைத்தும் 2ம் எதிர்மனுதாரர்தான் செய்தார் என்றால் இல்லை. எனது கணவர்தான் எடுத்த சீட்டு பணத்தின்மூலம் திருமண செலவினை செய்தார். எனது நிருபண வாக்குமூலத்தில் எனது கணவர் எடுத்த சீட்டு பணத்தினை கொண்டு திருமண செலவினை செய்ததாக கூறியுள்ளேன் இந்த சீட்டு பணம் யாரிடமிருந்து பெறப்பட்டது எப்போது எடுக்கப்பட்டது என்பது தெரியுமா என்றால் எனது திருமணத்திற்கு பிறகு எனது கணவர் சொல்லி மகாலட்சுமி என்ற சீட்டு கம்பெனியில் இருந்து எடுத்த பணம் என்று கூறினார். எனது கணவர் சீட்டு பணம் செலுத்தியதற்கான ரசீது ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அனைத்தும் எதிர்மனுதாரால் மறைத்து வைக்கப்பட்டுவிட்டது.

திருமணத்திற்கு பிறகு நானும் எனது கணவரும் கூட்டு குடும்பமாகதான் வாழ்ந்தோம். 2ம் எதிர்மனுதாரர் தனியாக குடியிருந்து வந்தார். 3ம் எதிர்மனுதாரருக்கு எனது திருமணத்திற்கு முன்பாகவே திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். ஆனால் அவர் எனது கணவர் வீட்டிலேயேதான் இருந்தார். எனது கணவர் எந்தவித உடல்நிலை குறைவால் இறந்தார் என்றால் என் கணவருக்கு முகதாடையில் உள்ள கேன்சர் கட்டியினால் இறந்துவிட்டார். எனது கணவருக்கு நான்தான் மருத்துவ சிகிச்சைக்கான செலவுகளை பார்த்தேன். அதற்கான மருத்துவ குறிப்புகள் மற்றும் ரசீதுகளை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை.

2ம் எதிர்மனுதாரர்தான் எனது கணவருக்குண்டான சிகிச்சை செய்ததாக சொன்னால் சரியல்ல. என் திருமணத்திற்கு முன்பு நான் போரூர் ராமசந்திரா மருத்துவமனையில் செவிலியராக பணிபுரிந்து வந்தேன். திருமணத்திற்காக வேளையை விட்டுவிட்டு வந்துவிட்டேன். எனது தந்தை என்ன வேளை செய்துவருகிறார் என்றால் தற்போது எந்தவேலையும் இல்லை. என்னுடன் பிறந்தவர்கள் 2 சகோதரர்கள் ஆவார்கள். என் கணவரின் தொழிலுக்காக எனது 60 சவரன் சீதன நகைகளை கொடுத்ததற்கான ஆதாரம் ஏதும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் அதன் ஆதாரம் என்னிடம் உள்ளது.

எனது கணவருக்கு தொழில் செய்வதற்காக எனது பெற்றோர் வீட்டிலிருந்து எவ்வளவு தொகை வாங்கி கொடுத்தேன் என்ற விவரம் மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. எனது திருமணத்திற்கு முன்பே என் கணவர் பெயரில் பேரூந்து மற்றும் கார் இருந்தது. அது இல்லாமல் என் கணவரிடம் 2 டூரிஸ்டு வேன் இருந்தது. எனது கணவர் மோட்டார் வாகனங்களை வாங்கி விற்கும் தொழில் செய்துவந்தார்.

நான் சொல்வதுபோல் எனது நகைகளை கொண்டு எனது கணவர் பேரூந்து மற்றும் காரினை வாங்கவில்லை என்றாலும், எனது கணவர் பெயரில் உள்ள பேரூந்து மற்றும் கார் திருமணத்திற்கு முன்பு 2ம் எதிர்மனுதாரால் சகோதரனுக்கு வாங்கி கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் கொடுத்த ரூபாய் ஒரு லட்சம் பணத்தின்மூலம்தான் எனது கணவர் புல்லட் இருசக்கர வாகனம் அவரது பெயரில் வாங்கினார். இருசக்கர வாகனத்திற்குண்டான ஆதாரங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இருசக்கரத்திற்கு வாகனத்திற்குண்டான தவணைகளை நான்தான் செலுத்திவந்தேன். எனது குழந்தைபேருக்காக பெற்றோர் வீட்டிற்கு வந்த சமயத்தில் 2ம் எதிர்மனுதாரர் மீதி தவணைகளை செலுத்தி இருசக்கரவாகனத்தினை எடுத்துச்சென்றுவிட்டார்.

மேற்படி இருசக்கர வாகனத்திற்கு என்னால் செலுத்தப்பட்டதாக சொல்லப்படும் தவணை ரசீதுகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.ஆனால் என்னிடம் உள்ளது. 2ம் எதிர்மனுதாரர் இருசக்கர வாகனத்தினை எடுத்துச்சென்றதற்கான ஆதாரம் எதுவும் நீதிமன்றத்தில் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஆனல் என்னிடம் உள்ளது. எனது கணவர் பெயரில் உள்ள பேசர்பைக் தற்போது என்வசம்தான் உள்ளது. எனது கணவரிடமிருந்த ரூபாய் நாற்பது ஆயிரம் மதிப்புள்ள செல்போன் வாங்கியதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி செல்போன் 2ம் எதிரிபெயரில் வாங்கப்பட்டு அதற்குண்டான தவணைகளை நாங்கள்தான் செலுத்தி வந்தோம்.

எனது நிரூபண வாக்குமூலத்தில் மேற்படி டூரிஸ்டு பேருந்து, கார், இருசக்கர வாகனம், செல்போன் அனைத்தும் எனது கணவர் பெயரில்தான் வாங்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பொருட்களுக்கான பராமரிப்பு செலவு மற்றும் அதன் வருமானங்கள் அனைத்தும் என் கணவர்தான் பராமரித்து வந்தார். நானும் எனது கணவரும் தனிகுடித்தனம் சென்ற பிறகு மேற்படி பொருட்களை நாங்கள்தான் பராமரித்து வந்தோம்.

எனது கணவர் எங்கிருந்து சென்னை சென்று மருத்துவ சிகிச்சைகள் செய்துவந்தார் என்றால் எனது பெற்றோர் வீட்டிலிருந்துதான் சென்று வந்தார். எவ்வளவு காலமாக என் கணவர் சிகிச்சை எடுத்துக்கொண்டிருந்தார் நான்கு மாதங்கள் சிகிச்சை எடுத்துவந்தார். நான் சொல்வதுபோல் எனது கணவருக்கு மருத்துவ சிகிச்சைக்கான செலவுகள் நான் செய்யவில்லை என்றாலும் 2ம் எதிர்மனுதாரர்தான் செய்து வந்தார் என்றால் சரியல்ல. எனது கணவர் எந்த மருத்துவமனையில் இறந்தார் என்றால் எனது கணவர் பிப்ரவரி 2024ம்தேதி அவர் பெற்றோர் வீட்டிற்கு சென்றபிறகு அவரை பற்றிய தகவல் எனக்கு கிடைக்காததால் அவர் எந்த மருத்துவமனையில் இறந்தார் என்ற விவரம் எனக்கு தெரியவில்லை. எனது கணவர் என்னைவிட்டு பிரிந்த பிறகு அவரை தொடர்பு கொள்ள முயற்சிக்கவில்லை என்றால் சரியல்ல. எனது கணவரை மட்டும் தொடர்பு கொள்ள முயற்சித்தேன். வேறு யாரையும் அணுகவில்லை.